1970 பிப்ரவரி 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 120 பிறகு எடுத்துக் கொள்ளப்படும். அடுத்த வினா 121.

போலி முடிகள் தயாரிப்பு.

* 121 வினா.—**திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அரசுத் துறையில் போலி முடிகள் (டோப்பாக்கள்) தயாரிக்கப்படுகின்றனவா ?

(இ) ஆம் எனில், ஆண்டுதோறும் எவ்வளவு மதிப்புள்ள போலி முடிகள் தயாரிக்கப்படுகின்றன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் போலி முடிகளை (டோப்பாக்கள்) நம் நாட்டில் யார் யார் உபயோகப் படுத்துகிறார்கள், யார் யாருக்கு எல்லாம் உபயோகப்படுத்தக் கூடிய நிலைமை இருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

(விடை இல்லை.)

பக்கிங்ஹாம் கால்வாய் மேம்பாட்டுத் திட்டம்.

* 122 வினா—**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) பக்கிங்காம் கால்வாய் மேம்பாட்டுத் திட்டத்திற்காக மத்திய அரசின் உதவி ஏதேனும் கேட்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அது குறித்த விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) ஆம்.

(இ) (1) பக்கிங்ஹாம் கால்வாய் மேம்பாட்டிற்காக ரூபாய் 470 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் பெரிய திட்டம் ஒன்று 1964–65-இல் தயாரிக்கப் பட்டு, நான்காவது திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்காக இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. இத்திட்டத்திற்கு இந்திய அரசு இதுவரை இசைவு அளிக்கவில்லை.

(2) மாற்றியமைக்கப்பட்ட நான்காவது திட்டத்தில் ரூ. 44 லட்சம் செலவில் பக்கிங்ஹாம் கால்வாயில் சில சிறு மேம்பாடுகள் செய்வதற்கான திட்டம் ஒன்று, மாநிலத் துறையின்கீழ் அரசினால் மேற்கொள்ளப் பட்டது. எனினும், மேற்கண்ட திட்டத்தை மத்திய அரசுத் திட்டமாகக் கருத வேண்டுமென்று இந்திய அரசு கேட்கப்பட்டுள்ளது. ரூபாய் 20 லட்சம் செலவில் பக்கிங்ஹாம் கால்வாயின் தெற்கு, வடக்குப் பகுதிகளில் மேற்கொண்டும் தூர் எடுப்பதற்காக மற்றொரு திட்டமொன்றும் இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் குறித்த செலவு—பயன் விகித ஆய்வு அறிக்கையை அனுப்புமாறு இந்திய அரசு கேட்டுள்ளது. எனவே, இத்திட்டங்கள் ஒப்பளிப்பை எதிர்நோக்கியுள்ளன.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தி யமைக்கப்பட்ட திட்டத்தின்கீழ் என்ன என்ன அபிவிருத்திகளை அரசாங்கம் செய்திருக்கிறது ? இந்த அபிவிருத்தி வேலைகள் எப்பொழுது முடிவடை யும் ? இதற்கு எவ்வளவு செலவாகும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் தலைவர் அவர் களே, மாநில அரசுத் துறையின் சார்பாக சில வேலைகளைத் தொடங்கி இருக்கிறோம். அந்த வேலைகளுக்கு இதுவரை, 31—12—1969 வரை 11.12 லட்சம் ரூபாய் செலவாகியிருக்கிறது. மத்திய அரசாங்கத்தின் உதவியை எதிர்பார்க்கிறோம்.